துணவு மையங்களும், 15 லட்சம் ரூபாயில் தொழில் அதிபர்களால் தத்து எடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுக் கூடங்களை கட்டித் தருவதாக கூறிய அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுவதோடு, ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் மற்ற மாவட்டங்களில் அமல் படுத்தியதுபோல் கோவை மாவட்டத்தில் இந்தச் சத்துணவு மையங்களில் அமல்படுத்தப்படுமா என்பது பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆண்டு கோவை மாவட்டம் எடுக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப் பட்டு அந்தப் பணி நடந்து கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

15—

அனைத்து கல்வி நிலையங்களிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம்.

*10280—திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெற்றோர் ஆசிரியர் கழகம் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் உள்ளனவா?

(ஆ) பெற்றோர் ஆசிரியர் கழகங்களுக்கு கல்வி பே நணையை மேற்பார்வையிடும் அதிகாரம் வழங்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்கி இந்த வினாவுக்கு விடை அளிக்கிறேன்.

(அ) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்து பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம் அமையவேண்டுமென்று

1993 அக்டோபர் 26]

ஆணையிட்டிருக்கிறார்கள். இதை கருத்திற் கொண்டு இதுவரை தமிழகத்திலே இருக்கின்ற 40,905 பள்ளிகளில் 29,376 பள்ளிகளில் பெற்றோர்-ஆசிரியர் கழகம் தொடங்கப்பட்டு செயல்படுகிறது. மீதம் இருக்கிற 11,529 பள்ளிகளிலே ஜனவரி 1994-குள் அனைத்துப் பள்ளிகளிலேயும் தொடங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) கல்வி போதனையை மேற்பார்வையிடும் அதிகாரம் அரசு கல்வித் துறைக்கு மட்டுமே இருக்கிறது.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் உறுப்பினராக இருப்பதற்கு தகுதி பெறுவதற்கு ஏதாவது ஒரு வகுப்பில் அந்த உறுப்பினருடைய குழந்தை படிக்க வேண்டுமென்பதாகும். ஆனால் தற்போது நிறைய பள்ளிகளில் அதை நடைமுறைப் படுத்தவில்லை என்பதையும் முக்கிய பிரமுகர் என்று சொல்லிக் கொண்டு பள்ளியின் நிர்வாகத்தில் தலையிடுவதையும் அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அறியும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகம், கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிடும்போது, தங்களுடைய குழந்தைகளின் கல்வித் தரம் தெரிவதற்கும், ஆசிரியர்களின் குறைகளை அறிவதற்கும், பள்ளியின் வசதிகளை நிறைவு செய்வதற்கும் பயனாக இருக்கும். ஆகவே, பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் கல்வி போதனையை மேற்பார்வையிடுவதற்கு அதிகாரம் இல்லையென்றாலும், மாதம் ஒரு முறையாவது பள்ளியின் நிர்வாகத்துடன் பேசுவதற்கும் அவசியம் கூட்டம் ஒன்றை கூட்ட ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி போதனையை மேம்படுத்த ஆசிரியர்கள் கருத்தரங்குகள் நடத்துவது, பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளின் கல்வி வளர்ச்சி, பள்ளியின் முன்னேற்றம், பெற்றோர் ஆசிரியர்களிடையே நட்புறவை வளர்த்

தல், கல்வி பயிற்றுவித்தலில் மேம்பாடு காண ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றில் பெற்றோர் ஆசிரியர் கழகம் உதவி வருகிறது. மாதம் ஒரு கூட்டம் என்று நடத்துவது இயலாது என்பதால் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு கூட்டமாவது பொதுக் குழுவாக கூட்ட வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் இயங்கி வரும் பள்ளிகளிலே அந்தப் பதிவேடுகள் எல்லாம் சரியான முறையிலே நிர்வகிக்கப்படாமல், அந்த உறுப்பினர்கள் பெயர்கள்கூட திரும்பவும் ரெஜிஸ்டர் செய்யப்படாமல், அந்த ஆவணங்கள் எல்லாம் சரியான முறையிலே பராமரிக்கப்படாத நிலையிலே இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவனத்திற்குக் கொண்டுவரப் பட்ட நிகழ்வுகளின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுவாக எல்லா பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் பதிவேடுகள் முறையாக பேணப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்க் குலத்தின் தனிப் பெரும் தலைவியாக திகழ்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் ஆட்சிக் காலத்தில்தான் ஒன்று முதல் ஐந்து வரை உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் முழுக்க முழுக்க பெண் ஆசிரியைகளே பணிபுரியும் காலக்கட்டமாகவும், அன்னை ஆசிரியர் கழகம் அமைத்த காலமாகவும் திகழ்கின்றது. எனவே, இந்தச் சூழ்நிலையில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அன்னை ஆசிரியர் கழக நிர்வாகிகளாக செயல்பட சமூக அந்தஸ்தை மட்டுமே தகுதியாக கொள்ளமல் ஓரளவு கல்வித் தகுதியும் நிர்ணயிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகத் அரிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 26]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் அன்னை ஆசிரியர் கழகத்தில், அந்தந்தப் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவ மாணவியரின் பெற்றோர்களே இடம் பெற வேண்டும் என்று இருப்பதால், கல்வித் தகுதியை நிச்சய மாக, உறுதியாக, அமுல்படுத்துவது இயலாத காரியம் என பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 16, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

16—

பட்டயக் கல்வி (Diploma) படித்தவர்கள் பெயருக்கு முன்னால் தாங்கள் படித்த பட்டயக் கல்வியைப் போடுதல்.

*11033—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறியியல் பட்டம் பெற்றவர்கள்போல பட்டயக் கல்வி (Diploma) படித்தவர்களும் தங்கள் பெயருக்கு முன்னால் தாங்கள் படித்த பட்டயக் கல்வியைப் போட்டால் அரசு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர் பாக ஆணை எதுவும் தேவையில்லை என்றும், தொடர்புடைய நபர்களின் பொறுப்பிற்கே விட்டுவிடலாம் என்றும், இந்த அரசு கருதுகிறது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஈ., எம்.டெக். படித்தப் பட்டதாரிகள் கூட தங்கள் பெயருக்கு முன்னால் என்ஜினியர் என்று போடுவதில்லை ஆனால் டிப்ளமோ படித்தவர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் என்ஜினியர் என்று போட்டுக் கொண்டு, லெட்டர்பேடிலும் அதைப் போட்டு செயல்படுகிறார்கள். எனவே, அரசு, என்ஜினி யரிங் பட்டம் படித்தவர்கள் மட்டும்தான் என்ஜினியர் என்று போட்டுக் கொள்ள வேண்டும், டிப்ளமோ படித்தவர்கள் போடக்கூடாது என்று ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பட்டம் பெற்ற வர்கள், தமது துறைகளில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம்